# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1708/34 - 2011 ජුනි 03 වැනි සිකුරාදා - 2011.06.03

*1708/34 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம்

17 அ பிரிவின் கீழான கட்டளை

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 17அ பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி, நிதி திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் தீர்மானிப்பதாவது -

(அ) இக்கட்டளையில் பகுதி I இல் உள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள், அப்பகுதியின் உப பிரிவு (2) இலுள்ள கட்டளையின் நோக்கங்களுக்கான அப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பனி தொடர்பிலானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன்

(ஆ) அட்டவணையின் பகுதி II இன் நிரல் I இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அளவுக்கு நேரத்தனைவிட குறையாத அத்தகைய ஏதேனும் செயற்பாடுகளில் முதலீடு செய்யும் அத்தகைய புதிய தொழில் முயற்சி மீது, ஏதேனும் கம்பனியின் அத்தகைய புதிய தொழில் முயற்சியின் இலாபம் மற்றும் வருமானத்திற்கு பகுதி II இன் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு, குறித்த காலப்பகுதிக்கான விலக்களிப்பினை வழங்குதல் மற்றும் பகுதி II இன் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதிக்கான வரி விலக்களிப்பு காலம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒரு வருடத்திற்குக் குறையாத காலத்திற்கு அத்தகைய முதலீடு முழுமையாகப் பேணப்படும்.

மஹிந்த ராஜபக்ஷ,<br>நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,<br>கொழும்பு,<br>2011, ஏப்பிறல் 29.

**அட்டவணை** I

**பகுதி** I

செயற்பாடுகள்

1. விவசாயம் அல்லது காட்டியல் பயிர்ச்செய்கை:
   - உணவுப் பயிர்கள், கைத்தொழில் பயிர்கள் அல்லது மலர்ப்பயிர்ச் செய்கை
   - காட்டியல் பயிர்ச்செய்கை ;

2. விலங்கு வேலாண்மை:
   பாற்பண்ணை, கோழிப்பண்ணை, பன்றி, ஆடு போன்ற விளங்குகளை வளர்த்தல்.

3. உற்பத்தி:
   - ஏற்றுமதிச சந்தைக்கு அனுப்புவதற்கு கருதப்பட்ட ஏற்றுமதிகளுக்கு:
     உற்பத்தி, தயாரிப்பு அல்லது பாரம்பரியமற்ற பொருட்களைப் பதப்படுத்தல்
   - உள்நாட்டு சந்தைக்கு மற்றும் /ஏற்றுமதி சந்தைக்கான பின்வரும் உற்பத்திகளுக்கு:

- படகுகள்
- மருந்துப் பொருட்கள்
- டயர் மற்றும் டியூப்புகள்
- வாகன உதிரிப்பாகங்கள்
- தளபாடங்கள்
- மட்பாண்ட, கண்ணாடிப் பொருட்கள் அல்லது கனிப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்
- றப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்
- அழகியற் சாதன உற்பத்திகள்
- உள்நாட்டு விவசாய உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள்
- நிர்மாணப்பொருட்கள்

பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதிகள் (நேரடி ஏற்றுமதிகள்/ கருதப்படுபவை உள்ளடங்களாக) இ.மு குறியீடு ஆறு இலக்கமுடைய ஒவ்வொரு வகுதியிலுமுள்ள பொருட்களின் வெளியீடுட்டுப் பெறுமதியில் தொண்ணூறு (90%) சதவீதத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், உள்ளூர் கைத்தொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் உள்ளூர் விற்பனைகளுக்கு வழங்கப்பட்ட அனுமதியினை மீளப்பெற்றுக்கொள்வதற்கான உரிமை நிதி அமைச்சிடம் உள்ளது.

**4. சேவைகள்**

- இலங்கைக்கு வெளியே நபரொருவருக்கு அல்லது பங்குடமையாளர்களுக்கு சேவையினை வழங்கல்
- சுற்றுலா அல்லது சுற்றுலாத்துறை சார்ந்த திட்டங்கள்
- ஹோட்டல் சேவைகள், விருந்தினர் இல்ல சேவைகள் அல்லது அதனையொத்த சேவைகளை வழங்கல்
- வர்த்தக கட்டிடங்கள் நிர்மாணம் உள்ளடங்களாக உட்கட்டமைப்புத் திட்டங்கள்
- ஏதேனும் களஞ்சியசாலை அல்லது பண்டகசாலை வசதியினை மேம்படுத்தல்
- புதுப்பிக்கக்கூடிய வளங்களைக் கொண்டு மின் பிறப்பாக்கல்
- கைத்தொழில் நரங்கள், விசேட பொருளாதார வலயங்கள், அறிவு நகரங்களை தாபித்தல்
- நகர வீடாக்கம் அல்லது பட்டின நிலைய அபிவிருத்தி
- ஏதேனும் துப்பரவு வசதி அல்லது கழிவு முகாமைத்துவ வழி முறைகளை ஏற்படுத்தல்
- நீர் சேவைகளை மேம்படுத்தல்
- உள்ளக நீர் வாய்க்கால்கள், போக்குவரத்து மேம்படுத்தல் (பிரயாண/சரக்கு)
- வைத்தியசாலைகளை நிர்மாணித்தலும் சுகாதார சேவைகளை ஏற்படுத்தலும்
- வானூர்திகள், கரையோரக் கப்பல்களை பராமரித்தல் மற்றும் திருத்துதல்
- விளையாட்டுச் சேவைகள் (உ+ம்: மோட்டார் பந்தயம் அல்லது கொல்ப் விளையாட்டுகள்)
- மென் பொருட்களை வடிவமைத்தல்

- ஏதேனும் பாரமான அல்லது பாரமற்ற பொறியியற் கைத்தொழில்கள்
- கால்நடைகளுக்கான செயற்கை விந்துச் சேர்க்கை (பாற்பண்ணை அபிவிருத்தி)
- உயர்கல்வி/திறன் அபிவிருத்தி /வளர்ந்தோர் கல்வி

இலங்கைக்கு வெளியே சேவைகளை வழங்கியதற்காக, அதன் புரள்வின எழுபது வீதம் (70%) மாற்றக்கூடிய வெளிநாட்டு நாணயத்தில் இருத்தல் வேண்டும்.

5. நாட்டிற்கு பொருளாதார நலன்களைக் கொண்டது என கருதத்தக்க நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய பிற உற்பத்தித் தயாரிப்புக்கள் அல்லது சேவைகள் வழங்கல்.

| *நிரல் I*<br>*முதலீட்டுத் தொகை* | *நிரல் II*<br>*விலக்களிப்புக் காலம்* |
|---|---|
| ஐ.அ. டொலர் 3 மில்லியனுக்குச் சமனான தொகையொன்றினைவிட குறையாதது | 05 வருடங்கள் |
| ஐ.அ. டொலர் 5 மில்லியனுக்குச் சமனான தொகையொன்றினைவிட குறையாதது | 06 வருடங்கள் |
| ஐ.அ. டொலர் 7 மில்லியனுக்குச் சமனான தொகையொன்றினைவிட குறையாதது | 07 வருடங்கள் |

பகுதி II இன் நிரல் I இலுள்ள ஆகக் குறைந்த முதலீட்டுப்பெறுமதி காணி, பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணம் போன்ற, நிரந்தர ஆதனத்தின் பெறுமதியையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

06-395

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.